**விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்**

First Published : 08 May 2010 01:46:51 AM IST

கிருஷ்ணகிரி, மே 7: கிருஷ்ணகிரி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் சங்கத்தினர் கிருஷ்ணகிரியில் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு அதன் மாநிலத் தலைவர் எஸ்.ஏ.சின்னசாமி தலைமை வகித்தார். மாநில கொள்கைப் பரப்புச் செயலர் கே.கே.கிருஷ்ணமூர்த்தி, மாவட்டத் தலைவர் பி.ஸ்ரீராமரெட்டி, செயலர் சென்னைய்யநாயுடு, பொருளர் கே.ராஜரத்தினம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வறட்சியால் காய்ந்து போன தென்னை, மா உள்ளிட்ட பயிர்களுக்கு நேரடி வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும், அனைத்து விவசாயக் கடன்களையும் ரத்து செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட 15 அம்ச கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

முன்னதாக கிருஷ்ணகிரி காந்தி சிலை அருகே இருந்து கோரிக்கைகளை வலியுறுத்தி ஊர்வலம் நடைபெற்றது (படம்).

**காலாவதியான பூச்சிமருந்து விற்பனை**

First Published : 08 May 2010 01:52:43 AM IST

திருவண்ணாமலை, மே 7: திருவண்ணாமலை வட்டத்தில் காலாவதியான பூச்சி மருந்துகள் விற்பனை செய்யப்படுகிறது என விவசாயிகள் புகார் கூறினர்.

திருவண்ணாமலை வட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் தாலுகா அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கோட்டாட்சியர் பத்மா தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

திருவண்ணாமலை வட்டத்தில் பூச்சி மருந்து விற்பனை செய்பவர்கள் காலாவதியான பூச்சி மருந்துகளை விற்பனை செய்கின்றனர். இதைத் தடுக்க வேண்டும். அரசு விதைப் பண்ணையிலேயே சில நேரங்களில் பூச்சியால் தாக்கப்பட்ட நெல் விதைகள் வழங்கப்படுகின்றன.

மதுராம்பட்டு ஏரியில் மூன்று முறை உலக வங்கிக் கடனுதவித் திட்டத்தில் உடைந்து போன மதகு சரி செய்யப்பட்டது. அம்மதகு தற்போது மீண்டும் உடைந்து விட்டது. இதற்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முதல் அத்தியந்தல் வரை இயக்கப்படும் 40-ஏ நகர பஸ்ஃப்ஸ அரசு கலைக் கல்லூரியில் இருந்து எம்.ஜி.ஆர். நகர், ஆணாய்பிறந்தான் கிராமம் வழியாக இயக்கினால் கூடுதல் வருவாய் கிடைக்கும்.

கமலபுத்தூர் ஏரியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். பொற்குணம் சாலை மிகவும் மோசமாக உள்ளது. இதனால் கரும்பு விவசாயிகள் தங்கள் கரும்பை அனுப்ப சிரமப்படுகின்றனர். கிராம நிர்வாக அலுவலர் அடிக்கடி கிராமத்துக்கு வந்து செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

கூட்டத்தில் பெறப்பட்ட 23 கோரிக்கை மனுக்கள் மீது தொடர்புடைய துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க கோட்டாட்சியர் பத்மா உத்தரவிட்டார்.

**நெல் விதைகள் விற்பனை தொடக்கம்**

First Published : 08 May 2010 01:52:29 AM IST

ஆரணி, மே 7: பெரணமல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் நெல் விதைகள் விற்பனை தொடங்கியது.

வங்கி சார்பில் விதை சார்ந்த துறை மூலம் அனுமதி பெற்று உற்பத்தி செய்த நெல் விதைகள் விற்பனை விழா, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நேரடிக் கடன் வழங்கும் விழா மற்றும் நவீன சிறப்பு அங்காடி திறப்பு விழா ஆகிய முப்பெரும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு சங்கத்தின் தனி அலுவலர் பி.சுப்பிரமணி தலைமை வகித்தார். திருவண்ணாமலை மண்டல கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் எஸ்.சுப்பிரமணியன் நெல் விதைகளின் விற்பனையைத் தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.9.17 லட்சம் கடனுதவி வழங்கப்பட்டது. பின்னர் நவீன சிறப்பு அங்காடி திறக்கப்பட்டது.

செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆட்சியர் ஆர்.வனிதா, கரும்பு வளர்ச்சி அலுவலர் வெங்கட்ராமன், கள மேலாளர் கே.வெற்றிவேலன், கூட்டுறவு சார் பதிவாளர் சுரேஷ், பெரணமல்லூர் கூட்டுறவு சங்கத்தின் செயலர் எஸ்.ராமசாமி, உதவி செயலர் கே.ஏழுமலை உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**புதிய சாகுபடி தொழில் நுட்பங்களை ஆர்வமுடன் கேட்ட விவசாயிகள்**

First Published : 06 May 2010 12:43:10 PM IST

மேலூர்,மே 5: மதுரை வேளாண்மைக் கல்லூரியில் நடைபெற்றுவரும் கரீப் பருவ வேளாண் வளர்ச்சி மற்றும் கருத்தரங்கப் பணிமனையில் செம்மைநெல் சாகுபடி மற்றும் நவீன வேளாண் கருவிகள் செயல்பாடு குறித்து, விவசாயிகள் ஆர்வமுடன் கேட்டறிந்தனர்.

இதுகுறித்து, மதுரை வேளாண்மைத்துறை இணை இயக்குநர் ப.சங்கரலிங்கம் கூறியதாவது:

வேளாண்மையில், தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய சாகுபடித் தொழில்நுட்பங்களை, அனைத்து விவசாயிகளும் நேரடியாக அறிந்துகொண்டு, தங்கள் நிலத்தில் செயல்படுத்தும் வகையில், இந்தக் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடங்கி புதன்கிழமை வரை மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் நான்காயிரத்துக்கும் மேற்பட்டோர், கண்காட்சியைப் பார்வையிட்டு பயன்பெற்றுள்ளனர்.

வியாழக்கிழமை இப்பணிமனை நிறைவடைகிறது.

தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை, விதைச் சான்றிதழ், பட்டுப் பூச்சி வளர்ப்பு, கால்நடை, மீன்வளம் ஆகிய துறையினர் இணைந்து, வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் இந்த பணிமனையை நடத்துகின்றனர்.

அந்தந்த வட்டார அளவிலான விவசாயத்துக்குத் தேவையான கோடை உழவு, விதை நேர்த்தி, விதையைக் கடினப்படுத்துதல், கருவி மூலம் நேரடி நெல் விதைப்பு, செம்மை நெல் சாகுபடி, களையெடுத்தல், மானவாரி விதைப்பு மற்றும் பின்செய் நேர்த்தி, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், அறுவடை, அதன்பின் மதிப்புக் கூட்டுதல் ஆகியவை பற்றி வேளாண் அதிகாரிகள் எடுத்துக் கூறியதுடன், நவீன கருவிகளைக் கொண்டு செயல்விளக்கமும் அளித்தனர்.

மேலும் விவசாயிகள் நேரடியாகவும் தங்கள் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டனர்.

**புதிய சாகுபடி தொழில் நுட்பங்களை ஆர்வமுடன் கேட்ட விவசாயிகள்**

First Published : 06 May 2010 12:43:10 PM IST

மேலூர்,மே 5: மதுரை வேளாண்மைக் கல்லூரியில் நடைபெற்றுவரும் கரீப் பருவ வேளாண் வளர்ச்சி மற்றும் கருத்தரங்கப் பணிமனையில் செம்மைநெல் சாகுபடி மற்றும் நவீன வேளாண் கருவிகள் செயல்பாடு குறித்து, விவசாயிகள் ஆர்வமுடன் கேட்டறிந்தனர்.

இதுகுறித்து, மதுரை வேளாண்மைத்துறை இணை இயக்குநர் ப.சங்கரலிங்கம் கூறியதாவது:

வேளாண்மையில், தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய சாகுபடித் தொழில்நுட்பங்களை, அனைத்து விவசாயிகளும் நேரடியாக அறிந்துகொண்டு, தங்கள் நிலத்தில் செயல்படுத்தும் வகையில், இந்தக் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடங்கி புதன்கிழமை வரை மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் நான்காயிரத்துக்கும் மேற்பட்டோர், கண்காட்சியைப் பார்வையிட்டு பயன்பெற்றுள்ளனர்.

வியாழக்கிழமை இப்பணிமனை நிறைவடைகிறது.

தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை, விதைச் சான்றிதழ், பட்டுப் பூச்சி வளர்ப்பு, கால்நடை, மீன்வளம் ஆகிய துறையினர் இணைந்து, வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் இந்த பணிமனையை நடத்துகின்றனர்.

அந்தந்த வட்டார அளவிலான விவசாயத்துக்குத் தேவையான கோடை உழவு, விதை நேர்த்தி, விதையைக் கடினப்படுத்துதல், கருவி மூலம் நேரடி நெல் விதைப்பு, செம்மை நெல் சாகுபடி, களையெடுத்தல், மானவாரி விதைப்பு மற்றும் பின்செய் நேர்த்தி, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், அறுவடை, அதன்பின் மதிப்புக் கூட்டுதல் ஆகியவை பற்றி வேளாண் அதிகாரிகள் எடுத்துக் கூறியதுடன், நவீன கருவிகளைக் கொண்டு செயல்விளக்கமும் அளித்தனர்.

மேலும் விவசாயிகள் நேரடியாகவும் தங்கள் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டனர்.

**கரும்பில் இடைக்கணுப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்துவது எப்படி?**

First Published : 06 May 2010 09:47:33 AM IST

சங்ககிரி, மே 5: கரும்பு பயிரில் இடைக்கணுப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்தும் வழி முறைகள் குறித்து, சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் ப.சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

அவர் கூறியுள்ளது:

கரும்பு நட்ட 4 மாதங்களுக்கு மேல் அறுவடை வரை இடைக்கணுப்புழு தாக்க வாய்ப்புள்ளது. கரும்பின் இடைக்கணுப் பகுதியில் இப் புழுக்கள் துவாரங்கள் ஏற்படுத்துவதால் அதன் வழியாக கரும்பின் தசை சக்கைகள் வெளிவரும். பாதிக்கப்பட்ட கரும்பின் மேல் மற்றும் கீழ் உள்ள பருக்கள் முளைத்து வெடிக்க ஆரம்பிக்கும். பாதிப்பு அதிகமானால் கரும்பு காயத் தொடங்கி மகசூல் குறைந்து, சர்க்கரைச் சத்து பாதிக்கப்படும்.

இதைக் கட்டுப்படுத்த முட்டை ஒட்டுண்ணியான டிரைக்கோகிரம்மா கைலோனிஸ், ஏக்கருக்கு ஒரு சி.சி என்றளவில் நட்ட 4 மாதங்களில் தொடங்கி 15 நாட்கள் இடைவெளியில் குறைந்தது 6 முறை விட வேண்டும். மேலும் நட்ட 5-வது மாதம் காய்ந்த சருகுகளை உரிக்க வேண்டும். கரும்பு சாயாமல் விட்டம் கட்ட வேண்டும்.

வயலில் நீர் தங்கினால் வடிகால் வசதி செய்ய வேண்டும். கரும்பு இடைக்கணுப் புழுக்களைக் கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணிகள் பவானிசாகர் மற்றும் மோகனூர் கரும்பு ஒட்டுண்ணி நிலையங்களிலும், கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திலும் கிடைக்கும்.

இம் முறைகளைக் கடைப்பிடித்து இடைக்கணுப் புழுக்களைக் கட்டுப்படுத்தி விவசாயிகள் பலனடையலாம் என வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**தொழிலாளர்கள் பற்றாக்குறையை சமாளிக்க புதிய பண்ணைக் கருவிகள் அவசியம்: வேளாண் பல்கலைக்கழக துணை வேந்தர் வலியுறுத்தல்**

First Published : 06 May 2010 09:47:22 AM IST

கோவை, மே5: விவசாயத் தொழிலாளர்களின் பற்றாக்குறையைச் சமாளிக்க புதிய பண்ணைக் கருவிகள் அறிமுகம் செய்ய வேண்டியது அவசியம் என்று வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ப.முருகேசபூபதி வலியுறுத்தினார்.

வேளாண் பல்கலை. கண்டுபிடித்துள்ள செம்மைநெல் சாகுபடிக்கான விசைக் களையெடுப்பான், வணிகப்படுத்தும் வகையில் பிரிமியர் பவர் எக்யூப்மெண்ட்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த விசைக் களையெடுப் பானின் அறிமுக விழா வேளாண் பல்கலை.யில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் துணைவேந்தர் முருகேசபூபதி பேசியது:

வேளாண் பல்கலைக்கழகம் இதுவரை 746 பயிர் ரகங்களை வெளியிட்டுள்ளது. 146 பண்ணைக் கருவிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. விவசாயப் பணிக்கு கூலி ஆட்கள் கிடைப்பதில்லை. அவ்வாறு இருந்தாலும் அதிக செலவாகிறது. கரும்பு சாகுபடியில் உற்பத்திச் செலவில் 50 சதம் வெட்டுக்கூலிக்குச் சென்றுவிடுகிறது. இதுபோன்ற காரணங்களால் வேளாண் உற்பத்தி குறைந்து வருகிறது. ஆகவே, புதிய பண்ணைக் கருவிகளைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியமா கிறது.

நம் நாட்டில் பெரும்பகுதியினர் சிறு, குறு விவசாயிகள் என்பதால் அவர்கள் பயன்படுத்தும் வகையில் சிறிய அளவி லான பண்ணைக் கருவிகளை அறிமுகம் செய்ய வேண்டும்.

வேளாண் கருவிகளுக்காக விவசாயிகளுக்கு ரூ.55 கோடி மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது. ஜப்பானில் 15 சென்ட்}க்கு மேல் விவசாய நிலம் இருப்பதில்லை. இதனால் மொட்டை மாடியில் கூட அங்கு விவசாயம் செய்கின்றனர். இந்தியா வில் ஏராளமான விவசாய நிலம் இருக்கிறது. இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

"செம்மை நெல் சாகுபடியில் அதிக மகசூல் கிடைக்கிறது. இருப்பினும் இதில் களை எடுப்பதில் சிரமம் உள்ளது. இது வரை கையால் இயக்கப்படும் கருவி பயன்படுத்தப்பட்டது. விவசாயிகளின் சிரமத்தைப் போக்கும் வகையில் விசைக் களையெடுப்பானை வேளாண் பல்கலை. கண்டுபிடித்துள்ளது.

இதை விவசாயிகளுக்கு கொண்டு செல்லும் வகையில் கருடா பவர் வீடர் என்ற பெயரில் களையெடுப்பான் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் விலை ரூ.31 ஆயிரம். மானிய விலையாக விவசாயிகளுக்கு ரூ.15 ஆயிரத்து 500}க்கு வழங் கப்படும்' என்று பிரிமியர் பவர் எக்யூப்மெண்ட்ஸ் நிறுவன இயக்குநர் ஏ.ராஜ்குமார் தெரிவித்தார்.

வேளாண் பல்கலை. பதிவாளர் பி.சுப்பையன், ஆராய்ச்சி இயக்குநர் எம்.பரமாத்மா, வேளாண் பொறியியல் கல்லூரி முதல்வர் எஸ்.சந்தானபோஸ் உள்ளிட்ட பலர் இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## கொப்பரை கொள்முதல் ஊழலை தடுக்க கமிட்டி அமைப்பு! 'தினமலர்' செய்தி எதிரொலியால் விவசாயிகள் மகிழ்ச்சி

பொள்ளாச்சி : பொள்ளாச்சியில் உள்ள அரசு கொப்பரை கொள்முதல் மைய ஊழல் குறித்து 'தினமலர்' நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது. அதன்விளைவாக, கொள்முதலுக்கு டோக்கன் வழங்க கூட்டுறவுத்துறை அதிகாரிகள் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது.

பொள்ளாச்சியில் உள்ள கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டி (பிசிஎம்எஸ்) மூலம் கொப்பரை கொள்முதல் நடக்கிறது. பொள்ளாச்சி மற்றும் துணை மையங்களான ஆனைமலை, திம்மங்குத்து, கிணத்துக்கடவு, நெகமம் ஆகிய இடங்களில் கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது. கொள்முதல் மையத்தில் நடக்கும் ஊழல்கள் பற்றி 'தினமலர்' நாளிதழில் செய்தி வெளியானது. செய்தியை சுட்டிக்காட்டி, கொள்முதலை முறைப்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் அரசுக்கு மனு அனுப்பினர்.

அதன்விளைவாக, கொப்பரை கொள்முதலுக்கு கமிட்டி அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. பொள்ளாச்சி மையத்தில் கமிட்டி அமைப்பது பற்றி ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டுறவுத்துறை தனி அலுவலர் சலீம், இணை பதிவாளர் அலுவலகம் சார்பில் அதிகாரிகள் நடராஜன், கதிரேசன், கொள்முதல் மைய கண்காணிப்பாளர் ஈஸ்வரன் ஆகியோர் கூட்டத்தை நடத்தினர். கொப்பரை உற்பத்தி செய்யும் விவசாயிகள் 25 பேர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியதாவது: கொள்முதல் துவங்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பு மட்டுமே உள்ளது. கொள்முதல் முறையாக துவங்கவில்லை. விவசாயிகள் கொண்டு வரும் கொப்பரையை கண்காணிப்பாளர் திருப்பி அனுப்புகிறார். தரம்பார்க்கும் அதிகாரிகளும், கொள்முதல் செய்யும் 'நேபட், டான்பேட்' அதிகாரிகள் சரியான நேரத்திற்கு வருவதில்லை. விவசாயிகளிடம் லோடிங், தரம் பிரித்து கட்டுவதற்கு மூட்டைக்கு 20 ரூபாய் பணம் வசூலிக்கின்றனர். வியாபாரிகள் ஒட்டுமொத்தமாக கொண்டு வரும் அட்டைகளை பதிவு செய்து முறைகேடாக கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது. பதிவு செய்து முறையாக காத்திருக்கும் விவசாயிகள் அலைக்கழிக்கப்படுகின்றனர்.

அரசியல் பலம் உள்ளவர்கள், வியாபாரிகள் கொண்டு வரும் கொப்பரை முன்பதிவு இல்லாமல் கொள்முதல் செய்யப்படுகிறது. இனிமேல் விவசாயிகள் கொண்டு வரும் அட்டையை மட்டும் பதிவு செய்ய வேண்டும். பதிவின் போதே கொள்முதல் தேதியையும் அறிவிக்க வேண்டும். பதிவு எண், விவசாயி பெயர், பதிவு செய்த தேதி, கொள்முதல் தேதி போன்றவற்றை அறிவிப்பு பலகையில் ஒட்டி வைக்க வேண்டும். முன்பதிவு, டோக்கன் வழங்குவதற்கு அமைக்கப்படும் கமிட்டியில் விவசாயிகளை உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்றனர்.

கூட்டுறவுத்துறை தனி அலுவலர் சலீம் பேசியதாவது: கொப்பரை கொள்முதலில் எந்த முறைகேடும் நடக்காமல் இருக்க தனி அலுவலர் மற்றும் இணைப்பதிவாளர் அலுவலஅதிகாரிகள் மூன்று பேர் கொண்டு கமிட்டி அமைக்கப்படுகிறது. அந்த கமிட்டியில் விவசாயிகளை சேர்க்க வேண்டுமானால் இணைப்பதிவாளர் உத்தரவிட வேண்டும். விவசாயிகளின் கோரிக்கையை இணைப்பதிவாளரிடம் தெரிவிக்க வேண்டும்.முன்பதிவானது கம்ப்யூட்டர் மூலமாகவும், ரிஜிஸ்டர் மூலமும் கையாளப்படுகிறது. அதை உயர்அதிகாரிகள் தினமும் கண்காணிப்பார்கள். கொப்பரை கொள்முதலுக்கு டோக்கன் வழங்கும் போது பாரபட்சமின்றி வழங்கப்படும்.

கொள்முதல் மையத்தில் யாருக்கும் பணம் கொடுக்க வேண்டியதில்லை. யாராவது பணம் கேட்டு தொந்தரவு செய்தால் இணைப்பதிவாளரிடம் புகார் செய்யலாம். கொள்முதலுக்கு பதிவு செய்யும் போது ஆண்டுக்கு 11 ரூபாய் நுழைவு கட்டணம் செலுத்த வேண்டும். கொள்முதல் செய்யும் போது உறுப்பினர் கட்டணமாக 190 ரூபாய் செலுத்த வேண்டும். ஆண்டு ஒரு முறை வசூலிக்கும் சந்தாவுக்கு ரசீது வழங்கப்படும். இவ்வாறு, தனி அலுவலர் தெரிவித்தார்.

**'தினமலருக்கு' நன்றி!** கொப்பரை கொள்முதலில் ஊழல் நடப்பதை தடுக்கும் பொருட்டு கமிட்டி அமைக்கும் ஆலோசனை கூட்டத்தில் விவசாயிகள் பேசும்போது, 'தினமலர்' நாளிதழில் வெளிவந்த செய்திகளை சுட்டிக்காட்டியும், பேப்பர் நகல்களை வழங்கியும் பேசினர். விவசாயிகளின் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாத அதிகாரிகள், 'இனி மேல் நடப்பது நல்லதாக இருக்கட்டும்' என்று ஒருவரியில் விளக்கம் கொடுத்தனர். விவசாயிகளின் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும் வகையில் செய்தி வெளியிட்ட 'தினமலர்' நாளிதழுக்கு விவசாயிகள் நன்றி தெரிவித்தனர்.

**விவசாயிகள் சங்க கூட்டம்**

பொள்ளாச்சி : பொள்ளாச்சி தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் மாதாந்திர கூட்டம், தலைவர் சுப்பிரமணியம் தலைமையில் நடந்தது.

பொருளாளர் ராமசாமி முன்னிலை வகித்தார். கூட்டத்தில், தேங்காய் கொப்பரை கொள்முதல் மையங்களில், கொப்பரை கொள்முதல் செய்ய மாவட்ட கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.மலை அடிவாரங்களில் விவசாய நிலங்களில், விலங்குகள் வந்து பயிர்களை சேதப்படுத்துகின்றன. அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு, இவற்றை தடுத்து நிறுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உரிய நஷ்ட ஈடு வழங்க வேண்டும். பொள்ளாச்சி தாலுகாவில் சமீபத்தில் பெய்த மழை மற்றும் காற்றினால் ஆதியூர், சென்னியூர் பகுதிகளில் பாதிக்கப்பட்ட வாழை, தென்னை மரங்களுக்கும், தோட்டங்களில் உள்ள பாதிக்கப்பட்ட வீடுகளுக்கும் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தாலுகா செயலாளர் முத்துசாமி நன்றி கூறினார்.

**ஒட்டன்சத்திரத்தில் மழை வாடிய பயிர்கள் தப்பின**

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரம் கிராமப்பகுதியில் மழை பெய்ததால் வாடும் நிலையில் இருந்த பயிர்களுக்கு தற்காலிக நிவாரணம் கிடைத்தது.

கேதையுறும்பு, வெரியப்பூர், முத்துநாயக்கன் பட்டி, புலியூர்நத்தம், காளாஞ்சிபட்டி, அத்திக் கோம்பை மற்றும் சுற்றியுள்ள ஊர்களில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு மழை பெய்தது. கடந்த சில நாட்களாக வெயில் அதிகமாகவும், கோடை மழை பெய்யாமலும் இருந்ததால் நிலத்தடி நீர்மட்டம் குறையத் தொடங்கியது. பல இடங் களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை இருந்தது.

பயிரிட்ட பயிர்களை காப்பாற்றும் அளவிற்காவது கிணறு,போர்வெல்களில் நீர் இருக்குமா என்ற சந்தேகம் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டது. இந்நிலையில் தற்போது பெய்த மழையானது அக்னி வெயில் காரணமாக வாடிய நிலையில் இருந்த பயிர்களுக்கு சற்று ஆறுதல் அளித்து உள்ளது.

**கோபியில் தே.பருப்பு வரத்து, விலை உயர்வு**

கோபிசெட்டிபாளையம்: கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு தேங்காய் பருப்பு வரத்து மற்றும் விலையும் கணிசமான அளவில் அதிகரித்துள்ளது. கோடை வெயில் மற்றும் பருப்பு விலை உயர்வால் இளநீர் மற்றும் தேங்காய்க்கு

நல்ல கிராக்கி இருந்தது. இதனால், தேங்காய் பருப்பு உற்பத்தி எதிர்பார்த்த அளவில் இல்லாத நிலை இருந்தது. தற்போது தேங்காய் பருப்புக்கு கிலோவுக்கு 33 ரூபாய் வரை கிடைப்பதால், விவசாயிகள் தேங்காய் பருப்பை அதிகளவில் உற்பத்தி செய்ய துவங்கியுள்ளனர்.

கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு கடந்த வாரம் 339 மூட்டை தேங்காய் பருப்பு ஏலத்துக்கு வந்தது. அதிகபட்சமாக கிலோ ஒன்றுக்கு 32.81 ரூபாய், குறைந்தபட்சமாக 31.91 ரூபாய்க்கு விற்றது. நடப்பு வாரம் 351 மூட்டை விற்பனைக்கு வந்தது. அதிகபட்சமாக கிலோ 33.26 ரூபாய், குறைந்தபட்சமாக 31.77 ரூபாய்க்கு விற்றது. கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் எள் ஏலம் துவங்கியது. நேற்று 60 மூட்டை எள் விற்பனைக்கு வந்தது. ஆனால், எள் வியாபாரிகள் யாரும் வராததால், ஏலம் நடக்கவில்லை.

**ஹைபிரிட் கலர் மிளகாய் விற்பனை**

சேலம்: கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் விளைவிக்கப்படும் ஹைபிரிட் கலர் மிளகாய் விற்பனை சேலத்தில் ஜோராக நடந்து வருகிறது. மிளகாய் என்றாலே பச்சை நிறத்தில் சிறிய அளவில் காணப்படும் என்ற நிலை மாறி, குறைந்த காரத்தன்மையுடன் கூடிய அதே பச்சை நிற குண்டு மிளகாய் விற்பனை செய்யப்பட்டு வந்தது.

அந்த மிளகாய் பெங்களூருவில் இருந்து வரவழைக்கப்பட்டது. தொடர்ந்து குறைந்த காரத் தன்மையுடன் சாதாரண மிளகாய் உருவத்தை விட நீளமான மிளகாய்கள் குளிர் பிரதேசங்களான ஊட்டி, கொடைக்கானல் ஆகிய பகுதிகளில் இருந்து தமிழகத்தின் பிற பகுதிகளுக்கு விற்பனைக்கு வந்தது. இத்தகையது மிளகாய் பஜ்ஜி தயாரிக்க மட்டுமே பயன்படுத்தப்பட்டன.

தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து புதிய வண்ண கலர்களில் மிளகாய் விளைவிக்கப்பட்டு, விற்பனைக்கு வந்துள்ளன. இந்த மிளகாய்கள் விளைவிக்கப்பட்ட காலத்தில் அலங்கார பொருளாகவும், நட்சத்திர ஹோட்டல்களில் நடத்தப்படும் உணவுக் கண்காட்சியில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது.

தற்போது இந்த மிளகாய்களை பொதுமக்கள் சமையலுக்கு பயன் படுத்தி வருகின்றனர். அத்துடன் மருத்துவ பொருளாகவும் பயன் படுத்த துவங்கி உள்ளனர். இத்தகைய மிளகாய்களில் காரத்தன்மை சுத்தமாக இல்லை. ஆனால், சாதாரண பச்சை மிளகாய்க்கு உண்டான வாசனை அப்படியே உள்ளது.

உட்பகுதியில் சதைப்பற்று அதிகமாகவும் குறைந்த எண்ணிக்கையில் ஒன்று அல்லது இரண்டு என்ற அளவிலேயே விதைகள் உள்ளன. தற்போது இந்த மிளகாயை சேலத்தில் வசிக்கும் வடமாநிலத்தவர்கள் அதிக அளவில் வாங்கி சமையலில் பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது சேலத்தில் கலர் மிளகாய்க்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளது. கிலோ 15 ரூபாய் முதல் 22 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. சேலத்தில் கடை வீதி, பால் மார்க்கெட், ஆற்றோரத் தெரு ஆகிய இடங்களில் 25க்கும் மேற்பட்ட வியாபாரிகள், தற்போது இந்த மிளகாய் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்து கலர் மிளகாய் விற்பனையில் ஈடுபட்டு வந்த ராஜா கூறியதாவது: மிளகாய்க்கு உரிய வாசனையை கொண்டு இருந்தாலும் புடலங்காய்க்கு உரிய சுவையை கொண்டு உள்ளது.

சிலர் இந்த மிளகாய் மூட்டுக்களில் ஏற்படும் வலி மற்றும் வாத நோய்களை சரி செய்வதாக வாங்கிச் சென்று சாப்பிடுகின்றனர். பச்சை, சிவப்பு, மஞ்சள், ஆரஞ்சு, வெள்ளை, கருஞ்சிவப்பு என 14 வண்ணங்களில் இந்த மிளகாய்கள்

விற்பனைக்கு வருகின்றன. மிளகாய்களை சமையலுக்கு மட்டுமின்றி திருமணம் உள்ளிட்ட விசேஷங்களில் அலங்கார பொருளாக பயன்படுத்தவும் வாங்கிச் செல்கின்றனர்.

**கொப்பரை கொள்முதல் மையம் அமையுமா? காங்கயம் விவசாயிகள் எதிர்பார்ப்பு**

காங்கயம் : 'காங்கயத்தில், கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைத்து, கொள்முதல் செய்ய வேண்டும்' என, காங்கயம், வெள்ளகோவில் பகுதி தென்னை விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

காங்கயம் தாலுகா கிழக்குப்பகுதியான திட்டுப்பாறை, பரசேர்வழி, நத்தகாடையூர், பாபினி, முத்தூர், வள்ளியரசல் கிராம பகுதிகள், கீழ்பவானி பாசன வசதி பெறுகின்றன. வெள்ளகோவில் பகுதியில் பி.ஏ.பி., பாசன வசதி உள்ளது. கீழ்பாவனி பாசனம், பி.ஏ.பி., பாசனம் மூலம் இப்பகுதியில் 25 ஆயிரத்திற்கும் கூடுதலான ஏக்கரில் தென்னை விவசாயம் உள்ளது. அமராவதி அணை பாசன வசதியுள்ள லக்கமநாயக்கன் பாளையம், கம்புளியம்பட்டி, அக்கறைப்பாளையம் உள்ளிட்ட கிராம பகுதிகளில் 10 ஆயிரத்திற்கும் கூடுதலான ஏக்கரில் தென்னை விவசாயம் உள்ளது.

ஆனால், காங்கயம் பகுதியில் உள்ள தென்னை விவசாயிகளிடம், கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் கொப்பரை கொள்முதல் செய்யப்படுவதில்லை. தென்னை விவசாயம் அதிகளவில் உள்ள பொள்ளாச்சி, உடுமலை, பல்லடம், தாராபுரம் பகுதிகளில் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால், காங்கயத்தில் கூட்டுறவு விற்பனை சங்க கொப்பரை கொள்முதல் மையம் இதுவரை அமைக்கப்படாமல் உள்ளது.

காங்கயம் பகுதி தென்னை விவசாயிகள், கொப்பரையை தனியார் மில்களுக்கும், வியாபாரிகளுக்கும் குறைவான விலைக்கு, விற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம், விவசாயிகளிடம் கொப்பரை கொள்முதல் செய்தால், தென்னை விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்கும்.

காங்கயத்தில் இருந்து 60 கி.மீ., தூரத்தில் உள்ள அலங்கியத்திலும், 25 கி.மீ., தூரத்தில் உள்ள கொடுவாய் பகுதி நிழலிகவுண்டம்பாளையத்திலும் கூட்டுறவு விற்பனை சங்க கொப்பரை கொள்முதல் நிலையம் உள்ளது. ஆனால், காங்கயம் பகுதி விவசாயிகளால் நீண்ட தூரத்தில் உள்ள இந்த கூட்டுறவு விற்பனை சங்க கொப்பரை கொள்முதல் நிலையங்களுக்கு சென்று வர இயலாது. எனவே, காங்கயத்தில் கூட்டுறவு விற்பனை சங்க கொப்பரை கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என தென்னை விவசாயிகள் அரசை வலியுறுத்தி வருகின்றனர்.

பாபினி பகுதி விவசாயி வேலுச்சாமி தெரிவித்ததாவது: காங்கயம் பகுதி தென்னை விவசாயிகளிடம், கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் கொப்பரையை அரசு நேரடி கொள்முதல் செய்ய வேண்டும். இங்குள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடம், 20 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.தேவையான குடோன் வசதியும் உள்ளது. கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டால், இப்பகுதி தென்னை விவசாயிகளுக்கு, வெளிமார்க்கெட்டை விடவும், கிலோவுக்கு 10 ரூபாய் கூடுதலாக கிடைக்கும். காங்கயம் பகுதி தென்னை விவசாயிகள் பயன்பெறுவர், என்றார்.

**வெங்காய ஏற்றுமதிக்கு நடவடிக்கை எடுக்க விவசாயிகள் வேண்டுகோள்**

பல்லடம் : 'வெங்காய ஏற்றுமதிக்கு நடவடிக்கை எடுத்து கொள்முதல் விலை உயர் வுக்கு வழிவகுக்க வேண் டும்' என, பல்லடம் பகுதி வெங்காய சாகுபடி விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல்லடம் தாலுகாவில் உள்ள பல்லடம், பொங்கலூர், கொடுவாய், குள்ளம்பாளைம், மந்திரிபாளையம், சித்தம்பலம், கேத்தனூர், உகாயனூர் உட்பட பல இடங்களில் ஒவ்வொரு பருவமும் 6,000 ஏக்கர் பரப்பளவுக்கு மேல் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டு, அறுவடை செய்யப்படுகிறது. நாற்றங்காலிட்டு, நான்கு மாதங்களுக்கு முன் சாகுபடி செய்யப்பட்ட சின்ன வெங்காயம், தற்போது அறுவடை நிறைவடையும் நிலையில் உள்ளது.

பல்லடம் பகுதி விவசாயிகளிடம் ஒரு கிலோ வெங்காயம் எட்டு ரூபாய் முதல் 11 ரூபாய் வரை தரம் பிரித்து கொள்முதல் செய்யப்படுகிறது. அவை, திருப்பூர், கோவை, திண்டுக்கல், தூத்துக்குடிக்கு அனுப்பி வைக்கப் படுகிறது. ஒரு ஏக்கர் வெங்காயம் பயிரிட்டு அறுவடை செய்வது வரை, விவசாயிகளுக்கு 35 ஆயிரம் ரூபாய் முதல் 40 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது.ஏக்கருக்கு சராசரியாக எட்டு டன் வெங்காயம் மகசூல் கிடைக்கிறது. 45 நாட்கள் நாற்றங்காலிட்டு 110 நாளில் அறுவடைக்கு வரும் சின்ன வெங்காயத்துக்கு, தற்போதுள்ள கொள்முதல் விலை போதுமானதாக இல்லை என்கின்றனர், வெங்காய சாகுபடி விவசாயிகள்.

குள்ளம்பாளையம் விவசாயி வெங்கடாச்சலம் கூறியதாவது: கிலோவுக்கு குறைந்த பட்சம் 14 ரூபாயாவது கொள்முதல் விலை கிடைக்கவேண்டும். ஆனால், தற்போது தரமான வெங்காயம், சுமாரான வெங்காயம் என இரு வகையையும் சேர்த்து, கிலோவுக்கு சராசரியாக 10 ரூபாய் மட்டும் கொள்முதல் விலை கிடைக்கிறது. வெங்காயத்துக்கு கட் டுபடியான நல்ல விலை கிடைக்க , வெளிநாட்டிற்கு வெங்காயம் ஏற்றுமதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.பொங்கலூரில் அமைய உள்ள குளிர்பதன கிடங்கை விரைவாக கட்டி முடிக்க வேண்டும், என்றார்.

---

தினத்தந்தி

## *நாமக்கல் மண்டலத்தில் கத்திரி வெயிலிலும் ஏறுமுகத்தில் முட்டை விலை கோழிப்பண்ணையாளர்கள் மகிழ்ச்சி*

*நாமக்கல், மே.8–*
*நாமக்கல் மண்டலத்தில் கத்திரி வெயில் கொளுத்தும் வேளையில் கூட முட்டை விலை ஏறுமுகத்தில் இருப்பதால் கோழிப்பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.*

*3 கோடி கோழிகள் வளர்ப்பு*

*சென்னை, வட ஆற்காடு, தென் ஆற்காடு பகுதிகளை தவிர தமிழகத்தின் இதர பகுதிகளும், கேரள மாநிலமும் நாமக்கல் மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகள் ஆகும். இந்த மண்டலத்தில் $3\frac{1}{2}$ கோடிக்கும் மேற்பட்ட முட்டையின கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.*

*இங்கிருந்து நாள் ஒன்றுக்கு சராசரியாக 2 கோடியே 80 லட்சம் முட்டைகள் வரை உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. ஆனால் தற்போது கத்திரி வெயில் கொளுத்தி வருவதால், 20 முதல் 25 சதவீதம் வரை முட்டை உற்பத்தி குறைந்து உள்ளது.*

*50 லட்சம் முட்டைகள் குறைவு*

*இதனால் மே மாதங்களில் வழக்கமாக 2 கோடியே 65 லட்சம் வரை முட்டை உற்பத்தி செய்யப்படும் நாமக்கல் மண்டலத்தில் தற்போது 2 கோடியே 10 லட்சம்*

முட்டைகள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன. ஏறத்தாழ 50 லட்சம் முட்டைகள் வரை உற்பத்தி குறைந்து உள்ளது.

இதில் கேரளாவுக்கு 70 லட்சம், வெளிநாடுகளுக்கு 15 லட்சம் என அனுப்பப்படுகின்றன. மற்றவை தமிழகம் முழுவதும் சில்லரையாக விற்பனை செய்யப்படுகின்றன.

கிடுகிடு உயர்வு

தற்போது முட்டையின் தேவை அதிகரித்து வருவதால், முட்டை விலை கிடுகிடு என உயர்ந்து வருகிறது. கடந்த மாதம் 20–ந் தேதி முட்டையின் கொள்முதல் விலை 225 காசுகளாக இருந்தது. அது தற்போது படிப்படியாக உயர்ந்து 245 காசுகளை தொட்டுள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முட்டையின் சராசரி கொள்முதல் விலை 198 காசுகளாக இருந்தது. ஆனால் இந்த ஆண்டு சராசரி கொள்முதல் விலை 224 காசுகளாக உயர்ந்துள்ளது.

இந்த விலை உயர்வு குறித்து பண்ணையாளர் முரளி கூறியதாவது:–

மீன் பிடிக்க தடை

தற்போது மீன்களின் இனபெருக்க காலம் என்பதால், தமிழகம் மற்றும் கேரளாவில் ஆழ்கடலில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த தடையின் காரணமாக கோழி மற்றும் முட்டை நுகர்வு பொதுமக்களிடையே அதிகரித்துள்ளது. குறிப்பாக கேரளாவில் தற்போது திருமண சீசன் என்பதால், அங்கு முட்டை மற்றும் கோழி விற்பனை சூடுபிடித்துள்ளது.

அத்துடன் கத்திரி வெயில் 100 டிகிரியை தாண்டி கொளுத்தி வருவதால், முட்டை உற்பத்தி குறைந்து உள்ளது. இதனை தடுக்க பாக்கஸ் எனப்படும் குளிர்விப்பு முறையை பண்ணையாளர்கள் கடைபிடித்து வருகிறார்கள்.

முட்டை உற்பத்தி பாதிப்பு

இதன்படி 20 நிமிடங்களுக்கு ஒருமுறையாவது கோழிப்பண்ணைகளின் மேற்கூரையில் தண்ணீரை பீச்சி அடிக்கவேண்டும். ஆனால் தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக தண்ணீர் பற்றாக்குறை அதிகளவில் உள்ளது. இதனால் பாக்கஸ் முறையை கடைபிடிக்க முடியாமல் பெரும்பாலான பண்ணையாளர்கள் கோழிகளின் எண்ணிக்கையை குறைத்து கொண்டனர். இதனால் முட்டை உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக 80 முதல் 90 வாரம் வரை முட்டைக்கோழிகளை பண்ணையாளர்கள் வைத்து இருப்பார்கள். ஆனால் தற்போது 60 வாரம் கோழிகள் கூட இல்லாத நிலை உள்ளது. இதற்கு கோழி விலை உயர்வும் ஒரு காரணம் ஆகும். இதுதவிர தீவன மூலப்பொருட்கள் விலை உயர்வு, காய்கறிகள் விலை உயர்வும் முட்டை விலை உயர்வுக்கு காரணமாக அமைந்து உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

பண்ணையாளர்கள் மகிழ்ச்சி

பொதுவாக கோடைகாலங்களில் முட்டையின் கொள்முதல் விலை 200 காசுகள், 210 காசுகள் என்ற அளவிலேயே இருக்கும். ஆனால் வழக்கத்துக்கு மாறாக இந்த ஆண்டு கத்திரி வெயில் காலத்திலும் கூட விலை உயர்ந்து வருவதால் பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

தற்போது கோடை விடுமுறை என்பதால் தமிழக சத்துணவு திட்டத்துக்கு நாள்தோறும் அனுப்பப்படும் 30 லட்சம் முட்டைகள் தடைப்பட்டு உள்ளன. இந்த மாத இறுதியில் அந்த பணி தொடங்கினால், முட்டை விலை மேலும் உயர வாய்ப்பு உள்ளது.

## *நடப்பு ஆண்டு ஏப்ரல் மாதத்தில் புண்ணாக்கு ஏற்றுமதி சரிவு*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நடப்பு ஆண்டு ஏப்ரல் மாதத்தில் புண்ணாக்கு ஏற்றுமதி 14 சதவீதம் சரிவடைந்துள்ளது. நம் நாட்டிலிருந்து அதிக அளவில் புண்ணாக்கை இறக்குமதி செய்யும் நாடுகளில் இதற்கான தேவை நன்கு இருந்த நிலையிலும் அம்மாதத்தில் ஏற்றுமதி குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*
*எண்ணெய் வித்துக்கள்*
*கடந்த சில மாதங்களாக, உள்நாட்டில் எள், நிலக்கடலை, சோயா, கடுகு போன்ற பல்வேறு எண்ணெய் வித்துக்களின் அரவை குறைந்ததே ஏற்றுமதி குறைந்ததற்கான முக்கிய காரணமாகும். மேலும், முன்பேர வர்த்தக சந்தைகளில் ஊக வணிகம் தலை தூக்கியதும், ரூபாய்க்கு எதிரான டாலரின் வெளிமதிப்பு குறைந்ததும் புண்ணாக்கு ஏற்றுமதியில் சரிவு ஏற்படுவதற்கு வழி வகுத்தன.*
*நடப்பு ஆண்டு ஏப்ரல் மாதத்தில், நம் நாட்டிலிருந்து 2.04 லட்சம் டன் புண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 2.39 லட்சம் டன்னாக இருந்தது. இந்தியாவிலிருந்து சோயா புண்ணாக்கு, கடலைப் புண்ணாக்கு, ஆமணக்கு புண்ணாக்கு, கடுகு புண்ணாக்கு போன்றவை அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.*
*தென் கொரியா*
*நம் நாட்டிலிருந்து தென் கொரியா நாடு குறிப்பிடத்தக்க அளவு பல்வேறு வகை புண்ணாக்கை இறக்குமதி செய்து வருகிறது. சென்ற ஏப்ரல் மாதத்தில் அந்நாடு இந்தியாவிலிருந்து 53,074 டன் புண்ணாக்கை இறக்குமதி செய்துள்ளது. இதில் 38,393 டன் கடுகு புண்ணாக்கு, 14,470 டன் ஆமணக்கு புண்ணாக்கும், 211 டன் சோயா புண்ணாக்கும் அடங்கும். சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தென் கொரியா, இந்தியாவிலிருந்து ஒட்டுமொத்த அளவில் 30,660 டன் புண்ணாக்கை இறக்குமதி செய்தது.*

## *நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8 சதவீதமாக உயரும்*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*சென்னை*
*தமிழகத்தின் தொழில்துறை, சேவை அளிப்பு மற்றும் விவசாய துறைகளில் தற்போது சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. எனவே, நடப்பு நிதி ஆண்டில், பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்காட்டும், மாநிலத்தின் மொத்த உற்பத்தி 7.5 முதல் 8 சதவீதம் வரை அதிகரிக்கும் என மாநில திட்ட குழுவின் துணைத் தலைவரும், பிரபல பொருளியல் வல்லுனருமான டாக்டர் எம்.நாகநாதன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*
*சென்ற ஆண்டில்...*
*சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5.53*

சதவீதமாக அதிகரித்துள்ளது. முந்தைய இரண்டு நிதி ஆண்டுகளில், பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்காட்டும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி (ஜி.டீ.பி) 5 சதவீதத்திற்கும் கீழாக இருந்தது. வேளாண் துறையில் ஏற்பட்டிருந்த பின்னடைவே இதற்கு முக்கிய காரணமாகும்.

கூடங்குளம் உள்ளிட்ட முக்கிய மின் உற்பத்தி திட்டங்கள் செயல்பாட்டுக்கு வரும்போது தமிழகத்தின் மின்சார துறையிலும் மகத்தான முன்னேற்றம் ஏற்படும் என அவர் மேலும் கூறினார். இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் மின் பகிர்மான இழப்பு 18 சதவீதம் என்ற அளவில் மிகவும் குறைவாக உள்ளது. இதனை 15 சதவீதமாக குறைக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தின் சிறந்த நிதி நிர்வாகம் மற்றும் வருடாந்திர திட்ட செயல்திறன் அடிப்படையில் திட்டக்குழு நடப்பு நிதி ஆண்டுக்கு இதுவரையில்லாத வகையில் ரூ.20,068 கோடி திட்டச் செலவுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இது, சென்ற நிதி ஆண்டைக் காட்டிலும் 15 சதவீதம் (ரூ.17,500 கோடி) அதிகமாகும். இதில் ஊரக மேம்பாட்டுக்காக அதிகபட்சமாக ரூ.3,167 கோடி ஒதுக்கப்பட உள்ளது. சமூக நலம் மற்றும் சத்துணவிற்காக ரூ.3,003 கோடியும், வீட்டு வசதி, நகர்ப்புற மேம்பாடு மற்றும் குடிநீர் வழங்கல் போன்றவற்றிற்காக ரூ. ரூ.2,960 கோடியும், விவசாயம் மற்றம் அது சார்ந்த துறைகளுக்காக ரூ.1,900 கோடியும், சாலைகள் – பாலங்களுக்காக ரூ.2,480 கோடியும், கல்விக்காக ரூ.1,178 கோடியும், சுகாதாரத்திற்காக ரூ.1,580 கோடியும் ஒதுக்கப்படும் என தெரிகிறது.

நீர் பாசன வசதி

அத்துடன் நீர்ப்பாசன வசதி மற்றும் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளுக்காக ரூ.784 கோடியும், தொழிற்சாலைகள் துறைக்காக ரூ.478 கோடியும், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக ரூ.818 கோடியும் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இலவச மின்சாரம் வழங்குவதற்காக மின் வாரியத்துக்கு ரூ.1,004 கோடி மானியமாக அளிக்கப்பட உள்ளது.

## கரும்பு ஆராய்ச்சிக்காக தமிழக அரசு ரூ.2 கோடி நிதி வழங்கி உள்ளது

## வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் தகவல்

கோவை, மே.8–

தமிழக அரசு கரும்பு ஆராய்ச்சி திட்டத்துக்காக ரூ.2 கோடியே 40 லட்சம் நிதி வழங்கி உள்ளது என்று வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி கூறினார்.

ஆலோசனை கூட்டம்

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் கரும்பில் மேற்கொள்ள வேண்டிய ஆராய்ச்சிகள் குறித்த வருடாந்திர ஆலோசனை கூட்டம் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கலையரங்க கூடத்தில் நடந்தது.

இதில் பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி கூட்டத்தை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

உற்பத்தி திறன்

இந்தியாவில் தற்போது 517 கரும்பு ஆலைகள் உள்ளன. தமிழகத்தை பொறுத்தவரை 37 ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. உலக அளவில் பிரேசிலுக்கு அடுத்தபடியாக

இந்தியா கரும்பை அதிக அளவில் உற்பத்தி செய்கிறது. தமிழ்நாட்டில் கரும்பின் சாகுபடி பரப்பு சுமார் 3.5 லட்சம் ஹெக்டேராகும். கரும்பு உற்பத்தி திறனில் 107 டன்கள் என்ற அளவில் தமிழ்நாடு முதல் இடம் வகிக்கிறது. உலக அளவில் கரும்பு உற்பத்தி திறனில் முதல் இடம் வகிக்கும் ஆஸ்திரேலிய நாட்டை காட்டிலும் அதிகமாகும். சேலம் மாவட்டம் சங்ககிரியில் துல்லிய பண்ணை தொழில்நுட்பம் மூலம் கரும்பு விவசாயி ஒருவர் சுமார் 119 டன் என்ற அளவில் கரும்பு மகசூல் எடுத்துள்ளார்.
வருகிற 2025–ம் ஆண்டில் இந்தியாவில் மதிப்பிடப்பட்ட வெள்ளை சர்க்கரையின் தேவை 30 மில்லியன் டன்களாகும். 11 சதவீதம் சர்க்கரை வடிதிறன் என்ற அளவில் உள்ள இந்த இலக்கை எட்ட கரும்பு உற்பத்தியின் அளவை 452 மில்லியன் டன்களாக அதிகரிக்க வேண்டும். சர்க்கரை வடிதிறன் தமிழகத்தில் 9.6 சதவீதமே உள்ளது. இது மராட்டிய மாநிலத்தை விட குறைவாகும். வேளாண் பல்கலைக்கழகம் வெளியிட்ட கரும்பு ரகங்களில் சர்க்கரை வடிதிறன் 12 சதவீத அளவிற்கும் அதிகமாக எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இருந்த போதிலும் 9.6 சதவீதம் மட்டுமே எடுக்கப்படுகிறது. இதற்கான காரணங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.
செவ்வழுகல் நோய்
கரும்பு சாகுபடியில் செவ்வழுகல் நோய் மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளது. இதன் காரணமாக கரும்பு மகசூல் 10 சதவீதம் முதல் 12 சதவீதம் வரை குறைய வாய்ப்பு உள்ளது. தமிழக அரசு செஸ் நிதி திட்டத்தின் வாயிலாக ரூ.2 கோடியே 40 லட்சம் கரும்பு ஆராய்ச்சிக்கும், செவ்வழுகல் நோய் எதிர்ப்புதிறன் கொண்ட கரும்பு ரகங்கள் கண்டுபிடித்து வெளியிடவும் வழங்கி உள்ளது. எனவே விஞ்ஞானிகள் செவ்வழுகல் நோய்க்கு எதிர்ப்பு திறன் கொண்ட ரகங்களை கண்டுபிடிப்பதில் முன்வரவேண்டும். கரும்பில் அதிக மகசூலை பெற நவீன தொழில்நுட்பங்களான குழி நடவு முறை, துல்லிய பண்ணை தொழில்நுட்பம் மூலம் சொட்டுநீர் மற்றும் கரையும் உரப்பாசனம் அளித்தல், அதிக அளவு இடைவெளி நடவு முறைகளை பல்கலைக்கழகம் வெளியிட்டு உள்ளது. நெல்லில் செம்மை நெல் சாகுபடி வெற்றி பெற்றது போல் கரும்பில் செம்மை கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.
இவ்வாறு முருகேசபூபதி கூறினார்.
ஆலோசனை கூட்டத்தில் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா, வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு மைய இயக்குனர் அஜ்ஜன், கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் நசீர் உள்பட விஞ்ஞானிகள் பலர் கலந்து கொண்டனர்.